இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 79 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஐப்பசி 13 – வியாழக்கிழமை 30 அக்டோபர் 2025 – கோவை ★ ★ 16 + 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 79 : Thiruvalluvar Year - 2056 - Ayppasi 13 - Thursday 30 October 2025 - Kovai ★★ 16 + 8 Pages ₹5.00

## பா.ஜ.க.வின் பகல் கனவு பலிக்காது!

# தி.மு.கழகமே மீண்டும் ஆட்சி அமைக்கும்!

## “என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச்சாவடி” பயிற்சிக் கூட்டத்தில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!





கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (28.10.2025) மாமல்லபுரத்தில், தமிழ்நாடு தலைகுனியாது “என் வாக்குச்சாவடி – வெற்றி வாக்குச்சாவடி” பயிற்சிக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், துணை பொதுச் செயலாளர்கள் – அமைச்சர் ஐ.பெரியசாமி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ், கனிமொழி கருணாநிதி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, தா.மோ.அன்பரசன், கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**சென்னை, அக். 30 -**

**தமிழ்நாடு தலைகுனியாது - “என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச்சாவடி” பயிற்சிக் கூட்டம் மாமல்லபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும் போது, “தமிழ்நாட்டில் தி.மு.கழகமே மீண்டும் ஆட்சி அமைக்கும்” என்றும், “பா.ஜ.க. வின் பகல் கனவு பலிக்காது” என்றும் உறுதிபடக் கூறினார்.**

மாமல்லபுரத்தில் நடைபெற்ற தி.மு.க. நிர்வாகிகளுக்கான ‘என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி’ பயிற்சிக்கூட்டத்தில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

இங்கு உட்கார்ந்திருக்கும் உங்கள் மனதில், இப்போது என்ன ஓடிக்கொண்டு இருக்கிறது என்று, எனக்கு நன்றாகத் தெரியும்… தலைவரும் சும்மா இருக்க மாட்டேன் என்கிறார்… நம்மையும் சும்மா இருக்க விடமாட்டேன் என்கிறார் என்று சிலர் நினைப்பீர்கள்… சுணங்கி சும்மா இருந்துவிட்டால், நாம் ஒரே இடத்தில் தேங்கிவிடுவோம்! அது தேக்கம்! உழைப்பைக் கொடுத்து லட்சியத்தை நோக்கி இயங்கிக் கொண்டே இருக்க வேண்டும்! அதுதான் இயக்கம்!

நம்முடைய இயக்கம் எந்நாளும் தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருப்பதற்கு அடித்தளமான உங்களை நம்பி, ‘என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச்சாவடி’ என்ற முழக்கத்தை முன்னெடுத் திருக்கிறோம்!

### “திராவிட மாடல் 2.0 ஆட்சி தொடங்கியது!”

உங்களுடைய உழைப்பால், ஆறாவது முறையாக ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் நாம், அடுத்து ஏழாவது முறையும் ஆட்சி அமைக்க வேண்டும்! அதற்குத் தான் இந்தப் பயிற்சிக் கூட்டம்!

அதிலும், 2019-ஆம் ஆண்டு முதல், நாம் எதிர்கொண்ட அத்தனை தேர்தல்களிலும், மகத்தான வெற்றிகளை பெற்று வருகிறோம்! நம்முடைய வெற்றிகள், நம்முடைய எதிரிகளுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது! 2026 தேர்தலிலும் நாம்தான் வெற்றிபெற போகிறோம்… அன்றைக்கு தலைப்புச் செய்தி என்ன என்றால், “திராவிட மாடல் 2.0 ஆட்சி தொடங்கியது!”. இதுதான் தலைப்புச் செய்தி! இதை நான் ஆணவத்தில் சொல்லவில்லை! உங்கள் உழைப்பின் மீதும் - ஆட்சியின் சாதனைகள் மீதும் -தமிழ்நாட்டு மக்கள் மீதும் வைத்திருக்கும் நம்பிக்கையில் சொல்கிறேன்!

நம்முடைய திராவிட மாடல் அரசின் திட்டங்களும் சாதனைகளும், கோடிக்கணக்கான மக்களின் உள்ளங்களிலும் இல்லங்களிலும் சென்று சேர்ந்திருக்கிறது! லட்சக் கணக்கான இளைஞர்களின் வாழ்க்கையில் ஏற்றத்தையும் - தொழில்துறையில் மிகப்பெரிய பாய்ச்சலையும் - கல்வித் துறையில் முன்னேற்றத்தையும் ஏற்படுத்தியிருக்கும் நம்முடைய திட்டங்களும் சாதனைகளும்தான் திராவிட மாடலின் அடையாளம்! இந்தியாவில் எந்த மாநில அரசும் நம்முடைய அளவிற்கு சாதனைகள் செய்திருக்க மாட்டார்கள்! மீதமிருக்கும் சில வாக்குறுதிகளையும் நிச்சயம் நிறைவேற்றித் தருவோம்!

நம்முடைய அரசு செய்த சாதனை களால்தான் நம்மால் தைரியமாக அனைவர் வீட்டுற்கும் சென்று, ஆதரவு கேட்க முடிகிறது!

### பல்வேறு சூழ்ச்சிகளில் ஈடுபடும் பா.ஜ.க.!

ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டுக்கு செய்து கொண்டிருக்கும் துரோகங்களை - நிதி ஒதுக்கீடுகளில் செய்து கொண்டிருக்கும் வஞ்சகங்களை எடுத்துச் சொல்லி, ‘தமிழ்நாடு போராடும் - தமிழ்நாடு வெல்லும்’ என்று தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று - இந்த மாபெரும் முன்னெடுப்பை வெற்றியடைய வைத்த, கழகத்தின் ரத்த நாளங்களான உடன்பிறப்புகள் ஒவ்வொருவருக்கும், இந்த மேடையில் இருந்து, என்னுடைய பாராட்டுகளை, இந்த சல்யூட் மூலமாக சொல்லிக் கொள்கிறேன்!

தந்தை பெரியாரும் - பேரறிஞர் அண்ணாவும் - முத்தமிழறிஞர் கலைஞரும் ஏற்படுத்திய சுயமரியாதை உணர்வால்தான், பா.ஜ.க. வின் பாசிச ஆட்சிக்கு அடிபணியாமல் - முதுகெலும்போடு எதிர்த்து நிற்கிறோம்! எதிர்த்து நிற்பது மட்டுமல்ல; விவசாயிகளுக்கு எதிரான மூன்று வேளாண் சட்டங்களை திரும்ப பெற வைத்தது மாதிரியான பல போராட்டங்களில் வெற்றியும் பெற்றிருக்கிறோம்! இப்போது கூட, தொகுதி மறுசீரமைப்புக்கு எதிராக, பல்வேறு மாநில முதலமைச்சர்களை ஒன்றிணைத்தோம்! அகில இந்திய மருத்துவப் படிப்பு ஒதுக்கீட்டில், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான உரிமைக்காக போராடி வாதாடி வெற்றி பெற்றோம்! இதையெல்லாம் பார்த்துதான், பா.ஜ.க.வுக்கு நம் மீது கோபம் வருகிறது. அதனால்தான், பல்வேறு சூழ்ச்சிகளில் அவர்கள் ஈடுபடுகிறார்கள்!

### உதயசூரியனை மக்களின் இதய சூரியனாக மாற்ற வேண்டும்!


இந்த நிலைமையில்தான், அடுத்தகட்டமாக, நமக்கு காத்திருக்கும் பணிகள் என்ன? அதை எப்படியெல்லாம் செய்ய வேண்டும்? தலைமை முதல் தொண்டர்கள் வரை எப்படி ஒருங்கிணைந்து ஒரே இலக்குடன் செயல்பட வேண்டும்? என்று விவாதித்து, அதை களத்தில் செயல்படுத்துவதற்காகத் தான், இந்தப் பயிற்சிக் கூட்டம்!

நம் கழக மாவட்டச் செயலாளர்கள், நாடாளுமன்ற மாநிலங்களவை - மக்களவை உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதிப் பார்வையாளர்கள், மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழகச் செயலாளர்கள் என்று அனைவரும் வந்திருக்கிறீர்கள். உங்கள் அனைவரையும் ஒன்றாக பார்க்கும்போது, உங்கள் முகங்களில் நான் உதயசூரியனைப் பார்க்கிறேன். அதனைத் தமிழ்நாட்டு மக்களின் இதயசூரியனாக மாற்ற வேண்டிய கடமையும் பொறுப்பும் உங்களுக்குத்தான் இருக்கிறது!

### “என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச்சாவடி” முன்னெடுப்போம்!

இந்தப் பயிற்சி கூட்டத்துக்குப் பிறகு, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும், ஏற்கனவே அமைக்கப்பட்டிருக்கும் பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள் குழு, பாக டிஜிட்டல் ஏஜென்ட், பாக இளைஞர் அணி, பாக மகளிரணி, பாகத்திற் குட்பட்ட கிளை, வார்டு செயலாளர்கள் உள்ளிட்ட அனைவரும் ஒருங்கிணைந்து ‘என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச்சாவடி’ என்று

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்

அவர்களின்

118 ஆவது பிறந்த நாள் மற்றும் குரு பூஜை

தமிழ்நாடு அரசின் சார்பில்

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின்

நினைவிடத்தில்

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

மாலை அணிவித்து மலர் தூவி

மரியாதை செலுத்துகிறார்கள்

நாள் : 30.10.2025, வியாழக்கிழமை,

நேரம் : காலை 9.30 மணி,

இடம் : பசும்பொன், இராமநாதபுரம் மாவட்டம்

சென்னை மாநகரில் தமிழ்நாடு அரசின் சார்பில்

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,

மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,

துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள்

மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

நாள் : 30.10.2025, வியாழக்கிழமை, நேரம் : காலை 9.30 மணி

இடம் : நந்தனம் சந்திப்பு, அண்ணா சாலை, சென்னை

செ.ம.தொ.இ / 1280 / வரைகலை / 2025

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-600 009